**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **02.03.2022**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த மக்காச்சோள படைப்புழு மேலாண்மை - ஒரு நாள் பயிற்சி**

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு, மக்காச்சோளப் "படைப் புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த மேலாண்மை" குறித்த ஒரு நாள் பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் பாதுகாப்பு மையம், பூச்சியியல் துறை கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண் மற்றும் உழவர் நலத்துறையுடன் இணைந்து 01.03.2022 அன்று நடத்தியது.

இக்கூட்டத்தில் முனைவர் சு. ஜெயராணி, பேராசிரியர், பூச்சியியல் துறை அவர்கள் வரவேற்புரையாற்றினார். பயிர் பதுகாப்பு மைய இயக்குனர் முனைவர் கு. பிரபாகர் அவர்கள் தனது சிறப்புரையில், சமீப காலங்களில் பயிர்களில் புலம் பெயர்ந்த பூச்சிகளின் பாதிப்பு குறித்து விளக்கினார். மக்காச்சோள படைப் புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த நிர்வாக முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும், அவர் கூறும்போது பூச்சிக் கொல்லி மருந்துகளை அளவுக்கு அதிகமாக உபயோகிப்பதால் ஏற்படும் எஞ்சிய நஞ்சு தன்மையையும் அதன் பாதிப்பையும் குறித்து எடுத்துரைத்தார். தற்போது பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிப்பதற்கு ஆளில்லா விமானங்கள் மிகுந்த அளவில் பயன்பாட்டிற்கு வர இருப்பதாகவும் அவற்றை வயல்வெளிகளில் எடுத்துச் செல்வதற்கு முன் பரிசோதனைக் கூடங்களிலும் ஆய்வுகளிலும் தெளிவான வழிகாட்டுதலோடு பயன்படுத்தி உறுதி செய்ய வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தொழில் நுட்ப உரை வழங்கிய பூச்சியியல் துறை, பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செ.வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், வேளாண் விரிவாக்க அலுவலர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். விவசாயிகளிடம் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக முறைகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். மேலும் பூச்சிக்கொல்லி மருந்துகளை குறித்த நேரத்தில் சரியான அளவுகளில், சரியான நேரத்தில், சரியான முறையில் தெளிக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

வேளாண் இணை இயக்குனர் பெருமாள் சாமி மற்றும் வேளாண் அலுவலர் (தரக்கட்டுப்பாடு) திருமதி புனிதா ஆகியோர் கலந்து கொண்டு வேளாண் அலுவலகர்கள், விவசாயிகளுக்கு சரியான பரிந்துரைகளை கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு தேவையான வழிகாட்டுதல்களை விஞ்ஞானிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தனர். இறுதியாக முனைவர் சீனிவாசன் நன்றியுரை நல்கினார்.

பயிற்சியின் முன்னதாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக சிறுதானியங்கள் துறை பண்ணை வளாகத்தில், மக்காச்சோள படைப்புழுவின் சேதத்தை எப்படி கண்டறிவது ?, சேதத்தை எவ்வாறு அளவிடுவது ?, விதை நேர்த்தி செய்வது எப்படி ?, முட்டை ஒட்டுண்ணிகளை வயல்வெளிகளில் எவ்வாறு விடுவது ? மற்றும் ஆளில்லா விமானம் கொண்டு பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிப்பது எப்படி ? என்பது குறித்த விரிவான செயல் விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. கூட்டத்தில் 60க்கும் மேற்பட்ட வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்